**தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூன் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

# 2 நிதி மீளாய்வு

## 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரணச் சொத்துக்கள் தொடர்பாக நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளை சட்டத்தின் கீழ் அறவீடு செய்யப்படும் மூலதனம், முதலீட்டு வருமானக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் என ரூபா 6,800,000 இற்கான வருமானம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 12,851,939 இற்கான வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது என நிதிக் கூற்றுக்களின் படி அவதானிக்கப்பட்டது. அது மதிப்பீட்டின் 188 சதவீதமாக காணப்பட்டது. அதன் படி மதிப்பீடு தயாரிப்பதில் பலவீனம் ஒன்று அவதானிக்கப்பட்டன. | கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக முதலீடுகளுக்காக பெற வேண்டிய வட்டி தாமதமாகக் கிடைத்தல், புதிய பொறுப்பு நிதிகள் சில ஆரம்பித்தல் மற்றும் மேற்கொள்ள முடியாமல் போன முதலீடுகள் அந்த வருடத்தில் மேற்கொண்டிருந்தமையால் மதிப்பீட்டு வருமானத்தை விட உள்ளவாறான வருமானம் அதிகரித்திருந்ததுடன் குறிப்பிட்ட பெறுமதி ஒன்றினை எதிர்வுகூற முடியாமல் இருந்தது. | வருமான மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 09 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 06 மூலதனச் செலவு விடயங்களுக்கு தேவையான ரூபா 16,700,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை மொத்த ஏற்பாடுகளில் ரூபா 7,245,549 தொகை அதாவது 17 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சைச் சேர்ந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | கொரோன தொற்றுநோய் நிலைமை காரணமாக செலவுகள் வரையறுக்கப்படல், பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் நடாத்தப்படாமை மற்றும் கொள்வனவு செய்தல் வரையறுக்கப்படல் ஆகிய காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | வழங்கப்பட்ட ஏற்பாடுகள் உரிய கருமங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் தொடர்பாக தனியார் துறையுடன் அணுகியிருந்த கூட்டுத்தொகை ரூபா 128,200 தொகைக்கான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிந்திருக்கவில்லை. | தவறுதலாக பொறுப்புக்கள் பதிவேட்டில் பதியப்படாமல் காணப்பட்ட போதிலும் வாக்குப் படி பேரேட்டில் முன்னைய ஆண்டின் கணக்கீடு செய்யப்பட்ட ஈடுபாட்டுப் பொறுப்பு என உட்படுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும் என. |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | | |
| (அ) | 1922 இன் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 47(1) | | நம்பிக்கை பொறுப்பு மரணச் சொத்துக் கணக்குகள் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த | 2021 ஆண்டின் நம்பிக்கை பொறுப்பு மரணச் சொத்துக்களின் இறுதிக் கணக்குகள் புதிய நம்பிக்கை | குறிப்பிட்ட கணக்குகள் குறித்த திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நம்பிக்கை பொறுப்பு மரணச் சொத்துக்களின் இறுதிக் கணக்குகள் கணக்காய்விற்காக 2022 மார்ச் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2021 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நம்பிக்கை பொறுப்பு மரணச் சொத்து இறுதிக் கணக்குகள் இவ் அறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு மரணச் சொத்து முறைமை ஒன்றின் மூலம் பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 396 | 107,147 | வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 107,147 இற்கான காலங் கடந்த 08 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சம்பளத்தில் இருந்து அரசாங்க ஊழியருக்கான சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அறவீடு செய்யப்பட்ட போதிலும், நிதியத்தில் பதிவு செய்தல் அலுவல்கள் தாமதம் ஆகியமையால் காசோலைகள் செலவு வைப்பதில் தாமதம் ஏற்பட்டது. | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| | (ii) நிதிப் பிரமாணம் 1646 | | பொது 268(அ) படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது 268(அ) படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்க முடியும். | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| | (iii) நிதிப் பிரமாணம் 1647(உ) | | திணைக்களத்தினால் வாகனங்களை அட்டவணைப் படுத்தும் பதிவேடு ஒன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | வாகனங்களை அட்டவணைப்படுத்தும் பதிவேடு ஒன்று விரைவாக தயாரித்து சமர்பிக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (இ) | 2018 ஒக்தோபர் 10 திகதிய இலக்கம் 03/2018 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ | | பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையை தீர்த்துக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், | குறிப்பிட்ட வாகனங்கள் தற்போது திணைக்களத்தின் பெயரிற்கு | உரிமையை தீர்த்துக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை | நீதியமைச்சில் இருந்து 2019 ஆண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 03 வாகனங்களின் உரிமையை தீர்த்துக்கொண்டு பெறுமதியினை நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாற்றப்பட்டுள்ளன. பாரிய எண்ணிக்கையான நிறுவனங்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டது எனவும், எதிர் காலத்தில் உரிமையை தீர்க்கும் ஆவணங்கள் அனைத்து நிறுவனங்களுக்கும் ஒரே தடவையில் வழங்கப்படும் என நீதி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3.1.6 | வருடாந்த பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு அவ்வறிக்கை தொடர்ந்து வரும் ஆண்டின் மார்ச் 31 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 ஆண்டிற்கான அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆண்டிற்குரிய பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 09 மாத கால தாமதத்தின் பின்னர் 2022 பெப்ரவரி 09 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 ஜனவரி 27 திகதி 65 – 0763 இலக்கம் கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக ரூபா 254,038 இற்கான நட்டத்தை குறிப்பிட்ட சாரதியிடம் அறவீடு செய்வதற்காக நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய வழக்கு | குறிப்பிட்ட வழக்கு தொடர்பாக மீண்டும் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு | நட்டத்தை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

| | | |
|---|---|---|
| தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாமையால் கால வரம்பு காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன், விபத்து ஏற்பட்டு 15 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | குறித்துக்கொண்டேன். | |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் இனங் காணப்பட்டிருந்த செயலாற்றுகை சுட்டிகள் 09 இல் 04 இற்கான உள்ளவாறான வெளியீடுகள், எதிர் பார்த்த வெளியீடுகள் போல 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை மத்தியில் அலுவலக விடயங்களை வழமை போல் நடாத்திச் செல்வதற்கு முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டமையால் இந்த எதிர் பார்த்த வெளியீடு குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது. | இனங் காணப்பட்ட இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஆ) | வ/ப அசோசியேடட் பத்திரிகை கம்பனியின் பங்குகளின் நம்பிக்கைப் பொறுப்பு அரச சார்பில் மேற்கொண்டு அந்தக் கம்பனியின் அலுவல்கள் நடாத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பணிப்பொறுப்பொன்றாக காணப்பட்ட போதிலும், அந்தக் கருமங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை சுட்டி ஒன்று என இனங் கண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் செயலாற்றுகை சுட்டிகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிப் பொறுப்புக்களின் படி செயலாற்றுகை சுட்டிகளை இனங்காண வேண்டும் என. |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு சட்ட திட்டங்களின் மூலம் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்த அதி விஷேட பணிப் பொறுப்புகள் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்று | திணைக்களத்தின் பெயரில் காணப்பட்ட இணைய சிங்கள மொழி மூல தகவல்களை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மொழி பெயர்ப்பு உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் தமிழ் மொழி மூலம் தகவல்களை | பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு செயற்திறனுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் செயற்படுத்தியிருக்காததுடன், திணைக்களத்தின் பெயரில் தயாரிக்கப்பட்டிருந்த இணைய பக்கத்தில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகள் மூலம் பயன்படுத்துவதற்காக தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் பொது மக்களின் தேவைகள், நிறுவனங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்கள் வெளியிடக்கூடியவாறு வசதிகளை ஏற்படுத்தி நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. அது தொடர்பாக கடந்த ஆண்டு கணக்காய்வு அறிக்கையின் மூலம் விடயங்கள் அறிவிக்கப்பட்ட போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | உட்படுத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

**4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 87 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 66 ஆக காணப்பட்டமையால் பதவியணியில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், 2021 பெப்ரவரி 09 திகதி முதல் நிருவாக உத்தியோகத்தர் பதவி மற்றும் 2015 ஆண்டு முதல் மொழி பெயர்ப்பாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | மொழி பெயர்ப்பாளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக PACIS மென்பொருள் ஊடாகவும் நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்பட வேண்டும் என. |
| (ஆ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 2001/18 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க 5 வருடங்கள் ஒரே கடமை நிலையத்தில் சேவையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வேறு | இந்த திணைக்களத்தில் 05 வருடங்களுக்கு மிகையான சேவையினை பூர்த்தி செய்துள்ள 17 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத – தொகுதி 2) சேவையைச் சேர்ந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என. |

சேவை நிலையங்களில் கடமையாற்றுவதற்காக வசதியளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தில் 05 வருடங்களை மிகைத்த 12 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

உத்தியோகத்தர்களாக காணப்படுவதுடன், அவர்கள் திணைக்களம் சார் உத்தியோகத்தர்களாக காணப்படுவதால் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்காக தகைமை பெற்றிருக்கவில்லை. மீதியான உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் அதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.